# PONDICHERRY UNIVERSITY

(A Central University)

**PONDICHERRY – 605 014**

## PRESS RELEASE FROM THE REGISTRAR, PONDICHERRY UNIVERSITY

**Tuesday, 04 September 2018**

## தென்கொரிய தேசிய பல்கலைக்கழகத்துடன் புதுவைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுவைப் பல்கலைக்கழகமானது உலகளவில் தலைச்சிறந்த 10 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக திகழ்ந்து வரும் தென்கொரியா, சங்பக் தேசிய பல்கலைக்கழகத்தோடு இணைந்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

தென்கொரியாவில் உள்ள சங்பக் தேசிய பல்கலைக்கழகம் 15 கல்லூரிகளையும் 83 துறைகளையும் 36 ஆய்வு நிறுவனங்களையும், 9 பட்ட படிப்பு புலங்களையும், 18,000 மாணவர்களையும் மற்றும் 755 தலைச்சிறந்த பேராசிரியர்களையும் கொண்டு உலகளவில் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அதிகளவில் படிக்கும் பல்கலைக்கழகமாக செயல்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கடந்த வாரம் தென்கொரியா, சங்பக் தேசிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்

## PRESS RELEASE FROM THE REGISTRAR, PONDICHERRY UNIVERSITY

பேராசிரியர் குர்மீத் சிங் மற்றும் மேலாண்மைத்துறை புல முதன்மையர் பேராசிரியர் ஆஞ்சநேயசுவாமி ஆகியோர் பங்கேற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் சங்பக் தேசிய பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் யாவோ பையோ யென் விழாவில் பங்கேற்றார். அப்போது பேசிய அவர், புதுவைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து உலகளாவிய புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட புரிந்துணர்வு ஒப்பந்தம் பயன்படும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இந்திய அரசு கிழக்கு நாடுகள் மீது கொண்டுள்ள நட்புறவு மேம்பட வழி வகுப்பதாகவும், பல்வேறு நிலைகளில் இரு நாடுகளிலும் கலை, கலாச்சாரம் மற்றும் கல்வி சார்ந்த துறைகளில் தலைச்சிறந்த மாணவர்கள் உருவாக உதவிடும் என்றும் பேசினார். இந்த ஒப்பந்த்ததின் வாயிலாக உலகின் தலைச்சிறந்த தொழில் நிறுவனங்களான தென்கொரியாவைச் சேர்ந்த சாம்சங், எல் ஜி, ஹூண்டாய் உள்ளிட்ட நிறுவனங்களில் புதுவைப் பல்கலைக்கழக மாணவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான தூண்டுகோலாகவும் அமையும். அதோடு இரு நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் உலாகளாவிய பல்வேறு பயிற்சிப் பட்டறைகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்க வாய்ப்பாகவும் அமையும்.

தென்கொரியா, சங்பக் தேசிய பல்கலைக்கழகத்தோடு, புதுவைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபட மேலாண்மைத்துறைத் தலைவர் பேராசிரியர் சித்ரா சிவசுப்ரமணியன், ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் விக்டர் ஆனந்தகுமார் ஆகியோர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.